மாக ஏற்றுக் கொள்கின்றது. பேரூராட்சி பகுதிகளுக்கு அது மிக சின்ன குக்கிராமங்களைக் கொண்டதாக இருக்கின்ற பேரூராட்சிகளாக இருக்கின்ற காரணத்தால், அந்த செலவை மானியமாக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. பெரும்பாலான அந்தப் பேரூராட்சிகள் அந்தத் திட்டச் செலவை கட்டமுடியாமல் இருக்கின்றன. ஆகவே இதையும் மானியமாகவே ஏற்றுக் கொண்டு சில இடங்களில் அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதேபோல் இதையும் மானியமாக ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் எப்போது அந்த கிராமங்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேள்வி, கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் தொகுதியில் (அதாவது நகருக்கு மேற்கு) எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப் படும் என்பது பற்றியதாகும். அது பற்றிய தகவல்களைக் கொடுத்திருக்கிறேன். மற்றத் தகவல்களுக்கு தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லுகின்ற நேரத்தில் சிறுவாணி குடிநீர் திட்டத்தின் கீழ் 16 கிராமங்களுக்கு விரிவாகக்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். புதிதாக அறிவிக்கப்பட்டிருகின்ற மாநகாராட்சிக்குட்பட்ட காளப்பட்டு பகுதிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேள்வி நகருக்கு மேற்குபகுதியைப் பற்றியது. அந்த ஒரு பகுதியைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள 16 கிராமங்களைப் பற்றி தகவல் கொடுத்து இருக்கிறேன். தங்களுக்கு கீழ்ப் பகுதி வேண்டும் என்றால் அதற்காக தனிக் கேள்வி போட்டால் தகவல் தருகிறேன்.

வைகைத் தண்ணீரை கம்பிக்குடி மற்றும் பெரியகண்மாய் களுக்கு திருப்பி விடும் திட்டம்.

வினா எண் 637—திரு. எம். பிச்சை: மாண்புமிகு நீர்ப்பாசனத் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலையூர் கண்மாயில் வரும் வைகை தண்ணீரை உலகாணி கால்வாய் மூலம் அருப்பு கோட்டை தொகுதியில் உள்ள கம்பிக்குடி மற்றும் பெரிய கண்மாய்களுக்கு திருப்பி விட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) இக்கால்வாய் ஆழப்படுத்தப்படுமா?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கும்,

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இல்லை

1982 மார்ச் 24]

(ஆ) விரிவாக ஆய்வு செய்தபின் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

(இ) முன்னுரிமைத் திட்டங்களின் ஆய்வுகள் முடிந்தபின் இவ்வேலைக்கான ஆய்வு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 9–30)

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஆய்வில் இல்லை என்று சொன்னார்கள். பின்னால் பரிசீலிக்கலாம் என்றும் சொன்னார்கள். வைகை அணை கட்டி முடிக்கிறபோது அதை விஸ்தரிக்கிறபோது, ஏற்கெனவே வைகை அணையின் மூலமாக பாசன வசதி பெறுகின்ற நிலங்களுக்கு விஸ்தரிப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்துள்ளது. அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சின்னகருப்பத்தேவர் எல்லாம் அதை வலியுறுத்திப் பேசி இருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்று சொல்லுங்கள்; 20 வருஷ கதைக்குப் போக வேண்டாம்.

திரு. க. பாரமலை : அதையும் கவனத்தில் கொண்டு இதை விஸ்தரிக்கின்றபோது, வைகை அணைக்கட்டினால், ஏற்கெனவே, பாசன வசதி பெற்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வைகை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் ஏற்பட்டு 394 இலட்சத்தில் நிறைவேற்றப்பட மார்ச்சு 1968-இல் அரசால் அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பிறகு 823 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு ஜூலை 1977 இலே அனுமதிக்கப்பட்டது. அந்த வேலைகள் எல்லாம் 1977 லே முடிந்தது. இந்த திட்டத்தின் நோக்கமே, புதிய நிலங்கள் பாசன வசதி பெறாது, ஆனால், ஆயக்கட்டுகளில் சேர்ந்திருந்தும், பாசன வசதி பெற முடியாத அளவிற்கு இருந்த 13,900 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறவும், ஏற்கெனவே பாசன வசதி பெற்ற நிலங்களுக்கு நிலையான பாசன வசதி பெறுவதற்கும், இத்திட்டம் தீட்டப்பட்டு, அதற்குப் பிறகு 1979-லே ஏற்பட்டபெரும் வெள்ளம் காரணமாக பல பகுதிகள் உடைந்து, அதை ரீ-டிசைன் செய்துகொண்டிருக்கிறோம். அந்த வேலைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் திரும்பவும், ஏதாவது எடுக்கமுடியுமா என்பதை பற்றி ஆய்வு செய்ய முடியும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற அந்த நிலையூர் கண்மாயிலே வரும் தண்ணீர் திருமங்களம் தொகுதியிலே இருக்கின்ற உலகாணி கால்வாய் வழியாக அருப்புக்கோட்டை தொகுதிக்குச் செல்வது என்பது நல்ல திட்டம் தான். வருடம் எல்லாம் வறண்ட நிலையிலே இருப்பவர்களுக்கு அது ஒரு வரப் பிரசாதமாக இருக்கும். இப்போது வைகைக் கால்வாயை நவீனமாக்குகின்ற காரணத்தினால், தண்ணீர் எஞ்சி இருக்கின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பிற்பட்ட நிலைகளைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் இதை விரைவிலே பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்கெனவே, 1977–79-லே ஏற்பட்ட வெள்ள உடைப்புகளை சரி செய்வதற்கு 313 இலட்சம் நாம் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட பிறகு இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்த வேலைகள் முடிந்த உடனே, இதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடனா நீர்த்தேக்கத்திலிருந்து மேல்மட்டக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 638—திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கடனா நீர்த்தேக்க மேல் மட்ட கால்வாய் புதிதாக அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ): கைவசமுள்ள திட்டங்களின் ஆய்வுகள் முடிந்தவுடன், இத்திட்டம் முதல் நிலை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என தலைமை பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே, அடுத்த இந்தக் கைவசம் இருக்கின்ற திட்டங்களை எடுதது‌க் கொண்டு நிறைவு பெறும், அப்படி பின்னாலே, அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கப்படுகிற நேரத்திலே, இப்போது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS